**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 35/2022** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அமுதா | **வயது** | : | 48 |
| க.**பெ** | : | சிவானந்தம் | **தாலுக்கா** | : | ஆரணி |
| **கிராமம்** | : | புலவன்பாடி | **தொழில்** | : | கூலிவேலை |

**<u>28.01.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1)இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தமிழ் படிக்க கொஞ்ச கொஞ்சமாக தெரியும். நான் புலவன்பாடியில் தான் வசித்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த தாவாவில் தாவாசொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், படியம்பட்டில் தாவா சொத்தின் சர்வே நெம்பர் 73/10 - 32 செண்ட் விஸ்தீரணம் கொண்டதாகும். வா.சா.1 ஆவணத்தின் படி என் தந்தை கிரையம் வாங்கியதாக நான் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன், அந்த சொத்தின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் சர்வே நெம்பர் தெரியாது, விஸ்தீரணம் 132 செண்ட் நிலம் படியம்பட்டில் உள்ளது.

2)11.05.1976 ல் என் தந்தை யாருக்காவது சொத்தை எழுதிகொடுத்துள்ளாரா என்றால் கண்ணையன், பானுமதி, ருக்மணி ஆகியோருக்கு வழக்கு சொத்தை தவிர வேறு சொத்து கிரையம் கொடுக்கப்பட்டது, அதன் சர்வே நெம்பர் ஞாபகமில்லை, படியம்பட்டில் 4 ஏக்கர் 7 செண்டா, அல்லது 80 செண்டா என்று ஞாபகமில்லை. தாவா சொத்தும் மீதி சொத்தும் என் தந்தை அடமானம் வைத்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும், வருடம் ஞாபகமில்லை, போளூர் கூட்டுறவு சொசைட்டியில் அடமானம் வைத்தார். நான் என்னுடைய முதல் விசாரணையில் தாக்கல் செய்த 15 ஆவணங்கள் பற்றி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.01.30 10:26:11 +0530

District Munsif,
Polur.